கம்பஹா மாவட்டத்தின் 26 கமநல சேவை செயற்குழுக்கள் - 2024

---

1. கணக்காய்வு அபிப்பிராயம்

1.1 கம்பஹா மாவட்டத்தின் 26 கமநல சேவை செயற்குழுக்களின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயலாற்றுகை கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுடன் தொடர்புடைய குறிப்புக்களுடன்கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினது மற்றும் 2000 இன் 46 இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 58(1) பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 2024 ஆம் ஆண்டில் கம்பஹா மாவட்டத்தின் 26 கமநல சேவை செயற்குழுக்கள் தொடர்பாக கணக்காய்வு அறிக்கைகள் வெளியிடப்பட்டிருந்ததுடன், அந்த அறிக்கைகளில் 01 செயற்குழுவின் அபிப்பிராயத்தை மறுத்திருந்ததுடன், 25 செயற்குழுக்களிற்கு முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளியிடப்பட்டிருந்தன. அதற்காக காரணமாகியிருந்த பொருண்மையான தவறுகள் பின்வருமாறு.

1.3 நிதிக்கூற்றுக்கள்

1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் உள்ளடங்களாக கணக்கீட்டு கொள்கைகளுடன் இணங்காமைகள்.

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் பரிந்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 19 பந்தி பிரகாரம் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பான பொறுப்பு அதன் முகாமைத்துவத்திற்கு உரியதாகுமென குறிப்பிட்டுள்ள போதும் 7 கமநல சேவை செயற்குழுக்களின் நிதிக்கூற்றுக்களினுள் அதன் பொறுப்புக்களை நியமத்தின் பிரகாரம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.	ஏற்றுக்கொள்கிறேன்.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இற்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும்.
(ஆ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 1 இன் 21 பந்தி பிரகாரம் நிதிக்கூற்றுத் தொகுதிக்கு உரிமை மூலதனத்தின் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று உள்ளடங்க வேண்டிய போதும் யக்கலை மற்றும் கலஹிடியாவ செயற்குழுக்களினால் உரிமை மூலதனங்கள் மாற்றங்கள் கூற்றும் படலகம கமநல சேவை செயற்குழுவினால் காசுப் பாய்ச்சல் கூற்றையும் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பித்திருக்கவில்லை.	ஏற்றுக்கொள்கிறேன்.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களின் கூறுகளை சமர்ப்பிக்க வேண்டும்.

(இ)	நியமம் இலக்கம் 01 இன் 53 ஆம் பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை பயன்படுத்தும் தரப்பினரிற்கு இலகுவாக விளங்கிக் கொள்ளும் வகையில் கடந்த ஆண்டின் ஒப்பீட்டு ரீதியான தகவல்களை நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்க வேண்டிய போதும் கலவிடியாவ கமநல சேவை செயற்குழுவினால் நிதி செயலாற்றல் கூற்று, நிதி நிலைமை கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றை சமர்ப்பிக்கும் போது அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	பதில் வழங்கப்படவில்லை.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இற்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும்.
(ஈ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 7 இன் 65 பந்தி பிரகாரம் சொத்தொன்றின் பெறுமதி மற்றும் பயனுள்ள ஆயட்காலத்தை குறைந்தபட்சம் ஒவ்வொறு வருடாந்த அறிக்கையிலும் கால முடிவு திகதியில் மீளாய்வு செய்ய வேண்டிய போதும் 5 செயற்குழுக்களிற்கு உரியதாக 19 சொத்து உருப்படிகள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	ஏற்றுக்கொள்கிறேன்.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 பிரகாரம் சொத்துக்களை மீளாய்வு செய்ய வேண்டும்.
(உ)	கமநல வங்கி கமநல சேவை செயற்குழுவின் ஒரு அலகொன்று ஆகையால் கூட்டிணைந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்க வேண்டிய போதும் 26 செயற்குழுக்களும் அவ்வாறு கூட்டிணைந்த நிதிக்கூற்றுக்களை தயாரித்திருக்கவில்லை.	கமநல சேவைகள் திணைக்களத்தினால் வழங்கியுள்ள படிவம் பிரகாரம் கணக்கு அறிக்கையை தயாரிக்கப்பட்டுள்ளது.	கூட்டிணைந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஊ)	03 கமநல சேவை செயற்குழுக்களில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகள் அனைத்தையும் குறித்த நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தி இருக்கவில்லை.	ஏற்றுக்கொள்கிறேன்.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் பிரகாரம்உ கணக்கீட்டு கொள்கைகளை வெளிப்படுத்த வேண்டும்.

1.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் பரிந்துரை	பரிந்துரை
(அ)	03 கமநல சேவை செயற்குழுக்களில் மீளாய்வாண்டில் காசுப் பாய்ச்சல் கூற்றை தயாரிக்கும் போது செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்ட வேண்டிய ரூபா 996,052 ஆன செயற்பாட்டு கொடுக்கல் வாங்கல்கள் முதலீட்டு	ஏற்றுக்கொள்கிறேன் .	இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 02 பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றை தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும்.

	நடவடிக்கைகளாகவும், ரூபா 3,679,834 ஆன செயற்பாட்டு கொடுக்கல் வாங்கல்கள் நிதி செயற்பாடுகளாகவும் காண்பிக்கப்பட்டிருந்தன.		
(ஆ)	சில ஆண்டுகளில் அரசாங்கத்தினால் பசளை விலைகளை குறைத்தமை மற்றும் இலவசமாக வழங்கியதால் 3 செயற்குழுக்களிற்கு உரியதாக செலவிட நேரிட்டிருந்த கூட்டுத் தொகை ரூபா 942,920 ஆன நட்டத்தை பசளை கம்பனிகளிடமிருந்து அறவிட வேண்டிய தொகையாக காண்பித்திருந்ததால் அப் பெறுமானத்தால் நிதி நிலைமை கூற்றில் போலியான சொத்துக்கள் காண்பிக்கப்பட்டிருந்தது.	நட்டத்தை அறவிட கடிதம் அனுப்பிய போதும் கிடைக்காததால் முறையான அங்கீகாரத்தை பெற்று கணக்குகளிலிருந்து அகற்ற நடடிக்கை எடுக்கிறேன்.	நட்டத்தை சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	2 செயற்குழுக்களின் நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 450,233 தொகை கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	பதில் வழங்கப்படவில்லை.	நிலையான வைப்பு வட்டியை சரியான விகிதத்தில் மற்றும் காலத்திற்கு எற்ப கணக்கிட்டு நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமதியை காண்பிக்க வேண்டும்.
(ஈ)	மாபொதல மற்றும் மரதகஹமுல 2 கமநல சேவை செயற்குழுக்களில் ரூபா 218,595 ஆன நிலுவை கணக்காய்வு கட்டணத்திற்காக மீளாய்வாண்டில் நிதிஏற்பாடு ஒதுக்கி இருக்கவில்லை.	நிதிஏற்பாட்டை ஒதுக்கி தவணைகளாக செலுத்தப்படும்.	செலுத்த வேண்டிய கணக்காய்வு கட்டணத்திற்காக நிதிஏற்பாட்டை ஒதுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(உ)	04 செயற்குழுக்களிற்குரியதாக கணக்கு விடயம் 04 இல் பொது லெஜர் பிரகாரம் செலவின பெறுமதியை பரீட்சை மீதிக்கு கொண்டுவரும் போது ரூபா 364,822 தொகை கூடுதலாக காண்பிக்கப்பட்டு இருந்தது.	சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன்.	ஆண்டின் செலவினத்தை சரியாக கணக்கீடு செய்ய வேண்டியதுடன், கணக்கீட்டு செயன்முறை முறையாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஊ)	பெம்முள்ள கமநல சேவை செயற்குழுவில் கடன் கொடுனர் அட்டவணை பிரகாரம் அரச பசளை கூட்டுத்தாபனத்திற்கு 2024 திசெம்பர் 31 திகதிக்கு செலுத்த வேண்டிய தொகை ரூபா 580,673 ஆன காண்பித்திருந்த போது நிதிநிலைமை கூற்றில் அத்திகதிக்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 615,828 தொகையாக ரூபா 35,155 கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.	சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன்.	மீதிகளை இணக்கம் செய்து சரியான மீதிகளை நிதிக்கூற்க்களில் காண்பிக்க வேண்டும்.

(எ)	பஸ்யால கமநல சேவை செயற்குழுவில் உரிமை மூலதனத்தின் மாற்றங்கள் கூற்றில் பிரகாரம் 2024 திசெம்பர் 31 திகதிக்கு திரண்ட நிதியம் ரூபா 2,943,849 ஆன போதும் நிதி நிலைமை கூற்றின் பிரகாரம் அது ரூபா 2,660,687 ஆனதில் ரூபா 283,162 ஆன வித்தியாசம் காணப்பட்டது.	எதிர்காலத்தில் சரி செய்கிறேன்.	மீதிகளை இணக்கம் செய்து சரியான மீதிகளை நிதிக்கூற்க்களில் சமர்ப்பிக்க வேண்டும்.
(ஏ)	தொம்பே கமநல சேவை செயற்குழுவிற்கு உரிய ஒரு டெக்டர் 02 ஆண்டுகள் காலத்திற்கு ஓராண்டிற்கு ரூபா 20,000 வீதம் கமநல அமைப்பொன்றிற்கு குத்தகை வழங்கியதில் கிடைக்க வேண்டிய வருமானத்தை கணக்கீடு செய்திருக்கவில்லை.	நிதியத்திற்கு சீராக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.	காலப் பகுதிக்குரிய வருமானம் / செலவலினை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும்.
(ஐ)	தொம்பே கமநல சேவை செயற்குழுவில் 2024 திசெம்பர் 31 திகதிக்கு வங்கி உறுதிப்படுத்தலின் பிரகாரம் மற்றும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நிலையான வைப்பு பெறுமதியின் ரூபா 1,992,425 ஆன இணங்காத வித்தியாசம் காணப்பட்டது.	பதில் வழங்கப்படவில்லை.	மீதிகளை இணக்கம் செய்து சரியான மீதியை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்க வேண்டும்.
(ஒ)	தொம்பே கமநல சேவை செயற்குழுவில் நிலையான வைப்பு வட்டி அட்டுறு அடிப்படையில் கணக்கிடாது ரூபா 640,056 ஆன வட்டி கணக்குகளில் இருந்து விடுபட்டிருந்தது.	பதில் வழங்கப்படவில்லை.	கணக்கீட்டு நியமம் பிரகாரம் ஆண்டின் வருமானத்தை கணக்கிட நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், சரியான பெறுமதிகளை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்க வேண்டும்.
(ஓ)	பல்வேவெல கமநல சேவை செயற்குழுவில் மீளாய்வாண்டிற்கு உரிய கைடெக்கடர் வருமானம் ரூபா 18,000 தொகை நிதி நிலைமை கூற்றில் கிடைக்க வேண்டிய வருமானமாக காண்பித்திருக்காததால் மிகை மற்றும் நடைமுறை சொத்துக்கள் ரூபா 18,000 தொகை குறைத்து காட்டப்பட்டிருந்தது.	சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன்.	கணக்கீட்டு நியமம் பிரகாரம் ஆண்டின் வருமானத்தை கணக்கிட நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், சரியான பெறுமதிகளை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்க வேண்டும்.
(ஔ)	கலஹிட்டியாவ கமநல சேவை செயற்குழுவில் ரூபா 382,487 ஆன இருப்பு பற்றாக்குறை தொடர்பாக மற்றும் ரூபா 78,607 ஆன குறைந்த விலைக்கு விற்பனை செய்தது தொடர்பாக ஏற்பட்ட நட்டத்தை கணக்கு புத்தகங்களில் பேணி வருவதுடன் அந்த மீதிகளை தீர்த்திருக்கவில்லை.	பதில் வழங்கப்படவில்லை.	பொறுப்பான குறித்த தரப்பினரிடமிருந்து அறவிட அல்லது முறையான அங்கீகாரத்தை பெற்று நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்க நடவடிக்கை எடுக்கக வேண்டும்.

(க)	கலஹிட்டியாவ கமநல சேவை செயற்குழுவில 2023 திசெம்பர் 31 திகதிக்கு வங்கி நடைமுறை கணக்கின் மீதி ரூபா 1,227,595 ஆனதுடன் அதனை பரீட்சை மீதியில் 2024 சனவரி 01 திகதிக்கு ஆரம;ப மீதியாக ரூபா 1,187,475 தொகையை கணக்கீடு செய்ததால் ரூபா 40,120 ஆன வித்தியாசம் காணப்பட்டது.	பதில் வழங்கப்படவில்லை .	இணங்காமைக்கான காரணத்தை வெளிப்படுத்திக் கொண்டு, சரியான கணக்கு மீதிகளின் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்க வேண்டும்.
(கா)	கலஹிட்டியாவ கமநல சேவை செயற்குழுவில் வங்கி நடைமுறை கணக்கின் மீதியாக காசுப் புத்தகத்தில் ரூபா 1,673,168 ஆக குறிப்பிட்டிருந்து நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 1,653,800 ஆக ரூபா 19,368 தொகை குறைத்து காட்டப்பட்டிருந்தது.	பதில் வழங்கப்படவில்லை .	- மேற்படி -

1.3.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் பரிந்துரை	பரிந்துரை
(அ)	7 கமநல சேவை செயற்குழுக்களில் 47 கணக்கு விடயங்களிற்குரியதாக பொதுப் பேரேட்டின் பிரகாரம் மீதிகள் மற்றும் பரீட்சை மீதிகளின் பிரகாரம் மீதிகளிற்கு இடையே ரூபா 5,359,149 ஆன வித்தியாசம் காணப்பட்டது.	ஜர்னல் குறிப்பின் மூலம் கொடுக்கல் வாங்கல்களை குறிக்கும் போது பேரேட்டில் குறிப்பிடப்படவில்லை.	கணக்கீட்டு செயன்முறையை முறையாக்கி, சரியான கணக்கு மீதிகளை பரீட்சை மீதிக்கு உட்படுத்தல் வேண்டும்.
(ஆ)	4 கமநல சேவை செயற்குழுக்களில் 5 கணக்கு விடயங்களிற்குரியதாக இருப்பு மீள்மதிப்பீட்டு அறிக்கை பிரகார மீதிகள் மற்றும் நிதிக்கூற்றுக்கள் பிரகார மீதிகளிற்கு இடையே ரூபா 3,761,437 ஆன வித்தியாசம் காணப்பட்டது.	இணங்குகிறேன்.	கணக்கு மீதிகளை இணக்கம் செய்து சரியான மீதிகளை நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தல் வேண்டும்.
(இ)	3 கமநல சேவை செயற்குழுக்களில் 4 கணக்கு விடயங்களிற்குரியதாக நிலையான சொத்து அட்டவணை பிரகாரம் மீதிகள் மற்றும் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் மீதிகளிற்கு இடையே ரூபா 748,108 ஆன வித்தியாசம் காணப்பட்டது.	சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன்.	- மேற்படி -

1.3.4 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

	அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள்	முகாமைத்துவத்தின் பரிந்துரை	பரிந்துரை
(அ)	ரூபா 100,000 அற்கு அதிக கொடுப்பனவு தொடர்பாக கமநல சேவை உதவி ஆணையாளரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டிய போதும்,	பதில் வழங்கப்படவில்லை.	முறையான அங்கீகாரத்தை பெற வேண்டியதுடன்,

	மீளாய்வாண்டில் 2 கமநல சேவை செயற்குழுக்களில் 8 சந்தர்ப்பங்களிற்கு உரியதாக ரூபா 4,506,210 ஆன கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது அதன் பிரகாரம் அங்கீகாரத்தை பெற்றிருக்கவில்லை.		அவ்வாறு செய்யாத தரப்பினரிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	கலஹிட்டியாவ கமநல சேவை செயற்குழுவில் 2023 திசெம்பர் 31 திகதிக்கு நிதி நிலைமை கூற்றில் உட்படுத்தி இருக்காத ரூபா 1,684,220 பெறுமதியான 17 கணக்கு மீதிகள் அதிகாரமின்றி 2024 சனவரி 1 திகதி பரீட்சை மீதிக்கு உட்படுத்தப்பட்டிருந்தது.	பதில் வழங்கப்படவில்லை.	முறையான அங்கீகாரத்தின் மீது ஜர்னல் குறிப்பு மூலம் கணக்குகளிற்கு செம்மையாக்க வேண்டும்.
(இ)	4 செயற்குழுக்களினால் 2024 ஆண்டில் கணக்கீடு செய்யப்பட்ட 227 ஜர்னல் குறிப்புக்களிற்காக, முறையான அங்கீகாரத்தை பெற்றிருக்கவல்லை.	பதில் வழங்கப்படவில்லை.	ஜர்னல் குறிப்புக்களிற்காக முறையான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டியதுடன், அவ்வாற அங்கீகாரமின்றி செயற்பட்ட தரப்பினரிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.3.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் பரிந்துரை	பரிந்துரை
(அ)	3 கமநல சேவை செயற்குழுக்களில் கூட்டுப் பெறுமதி ரூபா 2,387,513 ஆன 4 நிலையான வைப்புக்களிற்குரியதாக நிலையான வைப்பு பதிவேடு, கால முதிர்ச்சிக் கட்டளை போன்ற ஆவண சான்றுகள் காணப்படாத காரணத்தால் அந்த கணக்கு மீதிகளை கணக்காய்வின் போது திருப்திகரமாக ஒப்பாய்று செய்ய முடியவில்லை.	ஏற்றுக் கொள்கிறேன். எதிர்காலத்தில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.	எழுத்துமூல சான்றுகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	5 கமநல சேவை செயற்குழுக்களில் பல ஆண்டுகளாக நிலவிவரும் ரூபா 3,359,537 ஆன கணக்கு மீதிகளை உறுதி செய்ய சான்றுகள் சமர்ப்பிக்கப்படாததால் திருப்திகரமாக ஒப்பாய்று செய்ய முடியவில்லை.	ஏற்றுக் கொள்கிறேன். முறையாக பதிவழிக்க அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.	மீதிகளை உறுதிப்படுத்த எழுத்துமூல சான்றுகளை சமர்ப்பிக்க வேண்டும்.

(இ)	வேகே கமநல சேவை செயற்குழுவில் 60 சூரியா பசனை மூடைகளிற்காக இன்வொய்ஸின் நிழற் பிரதியின் மீது ரூபா 555,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், இன்வொய்ஸின் மூலப் பிரதியை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும்.	ஏற்றுக் கொள்கிறேன். மூலப்பிரதியை அழைப்பித்து வவுசருடன் இணைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	ஆவணங்களின் மூலப் பிரதியின் மீது கொடுப்பனவு செய்ய வேண்டியதுடன், நிழற் பிரதிகளிற்கு கொடுப்பனவு செய்யக்கூடாது இந்த கொடுப்பனவுகளின் மூலம்பிரதிகளை சமர்ப்பிக்க வேண்டும்.
(ஈ)	பஸ்யால கமநல சேவை செயற்குழுறில் 2 சந்தர்ப்பங்களில் ரூபா 46,087 ஆன் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது இன்வொய்ஸ் பத்திரம், கொருட் பெறுவனவு குறிப்பு, கிடைத்தமைக்கான உறுதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளாததால் கணக்காய்வின் போது போதியளவில் ஒப்பாய்வு செய்ய முடியவில்லை.	குறித்த வவுசர்களிற்கு கம்பனியிடமிருந்து பெற்றுக் கொண்ட பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.	அனைத்து உறுதிப்படுத்தல்க ளும் மேற்கொள்ளப்பட்ட பின்னர் பணம் செலுத்தப்பட வேண்டியதுடன், அவ்வாறு மேற்கொள்ளாத தரப்பினரிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(உ)	பெம்முல்ல கமநல சேவை செயற்குழுவில் 2018 கொள்கை ரீதியான தீர்மானத்தின் மீது பசளை விலை குறைந்ததால் ஏற்பட்ட ரூபா 89,670 ஆன நட்டத்தை பசளை செயலகத்திலிருந்து கிடைக்க வேண்டியதாக குறித்திருந்த போதும் உண்மையாக கிடைக்க வேண்யவை என உறுதி செய்யும் எழுத்துமூல சான்றுகள் சமர்ப்பிக்கப்படாததால் கணக்காய்வின் போது போதியவாறு ஒப்பாய்வு செய்ய முடியவில்லை.	ஏற்றுக் கொள்கிறேன். இந்த தொக்கு பசளை விலை குறைந்ததால் ஏற்பட்ட நட்டம் மற்றும் பசளை இலவசமாக வழங்கியதால் ஏற்பட்ட நட்டமும் உள்ளடங்கும்.	எழுத்துமூல சான்றுகளை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.4 சட்டம், விதி, பிரமாணம் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் ஆகியவற்றுடன் இணங்காமைகள்

	சட்டம், விதி, பிரமாணம் ஆகியவற்றுடனான தொடர்பு	இணங்காமைகள்	முகாமைத்துவத்தின் பரிந்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை			
(i)	நிதிப்பிரமாணம் 133, 134	17 கமநல சேவை செயற்குழுக்களிற்கு உரியதாக அந்த செயற்குழுக்களில் கொடுக்கல் வாங்களை உள்ளக கணக்காய்விற்கு உட்படுத்தி அந்த அறிக்கைகளின் பிரதிகளை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்திருக்கவில்லை	ஏற்றுக் கொள்கிறேன்.	உள்ளக கணக்காய்வை மேற்கொண்டு நிதிப்பிரமாணம் பிரகாரம் செயற்பட வேண்டும்.
(ii)	நிதிப்பிரமாணம் 139(7)	உறுதி செய்யப்பட்ட கொடுப்பனவு வவுசர்கள் மீது வவுசரில் குறிப்பிடப்படும் தொகை முறையாக செலுத்தப்படுவதாக “செலுத்தப்பட்டது” என்பதாக முத்திரையிட்டு குருகிய ஒப்பமிட வேண்டிய போதும் 3 கமநல சேவை செயற்குழுக்களில் 95 வவுசர்கள் தொடர்பாக அவ்வாறு செயற்பட்டு இருக்கவில்லை.	பதில் வழங்கப்படவில்லை.	நிதிப்பிரமாணத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(iii)	நிதிப்பிரமாணம் 753(2)	பண்டம் கிடைத்தவுடன் பொறுப்பேற்கும் உத்தியோகத்தரினால் 219 ஆம் பொது படிவத்தில் பெறுவனவுக் கட்டளையை தயாரிக்க வேண்டிய போதும் 3 கமநல சேவை செயற்குழுக்கள் தொடர்பாக அவ்வாறு செய்திருக்கவில்லை.	பதில் வழங்கப்படவில்லை.	நிதிப்பிரமாணம் பிரகாரம் செயற்பட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(iv)	நிதிப்பிரமாணம் 891(1)	6 கமநல சேவை செயற்குழுக்களில் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களின் தகவல்கள் உள்ளடங்கிய பிணை பதிவேடொன்றை தயாரித்திருக்கவில்லை.	பதில் வழங்கப்படவில்லை.	நிதிப்பிரமாணம் பிரகாரம் பிணை பதிவேடொன்றை பேணிச் செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கை			
(i)	கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 2020 ஜுன் 25 திகதிய இலக்கம் 8/2020 கொண்ட சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 880	25 கமநல சேவை செயற்குழுக்களில் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் நிலைய எழுதுனர் உத்தியோகத்தர்களிடம் இருந்து முறையே ரூபா 15,000 மற்றும் ரூபா 5000 வீதம் பிணை வைப்பு பெறப்பட்டிருக்கவில்லை.	பிணை வைப்பதற்காக உதவி ஆணையாளர் - கம்பஹாவிற்கு எழுத்து மூலம் இணக்கப்பாடு அனுப்பப்பட்டுள்ளது.	சுற்றறிக்கை பிரகாரம் பிணை வைப்பு பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ii)	2016 பெப்ரவரி 09 திகதிய இலக்கம் 03/2016 கொண்ட சுற்றறிக்கை	அதிகார பிரதேசத்தில் பதிவுசெய்துள்ள கமநல அமைப்புக்களின் செயற்பாடுகள் தொடர்பாக குறைந்த பட்சம் 4 மாதங்களிற்கு ஒரு முறையேனும், விவசாய ஆராய்ச்சி மற்றம் உற்பத்தி உதவி உத்தியோகத்தரினாலும், குறைந்த பட்சம் ஒரு மாதத்திற்கு ஒரு கமநல அமைப்பொன்றையாவது கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரினாலும் சமர்ப்பித்துள்ள பரீட்சிப்பு படிவத்தை அடிப்படையாக்க கொண்டு பரீட்சிப்பை நடாத்த வேண்டிய போதும், 25 செயற் குழுக்களிற்குரிய 877 கமநல அமைப்புக்களில் 42 கமநல அமைப்புக்கள் தொடர்பாக மாத்திரம் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டு இருந்ததுடன் 835 கமநல	ஏற்றுக் கொள்கிறேன். 2024 சனவரி மாதம் முதல் படிவம் மூலம் விசாரணை நடாத்த நடவடிக்கை எடுக்கிறேன்.	சுற்றறிக்கை பிரகாரம் விசாரணை நடாத்த வேண்டியதுடன், அவ்வாறு செயற்படாத உத்தியோகத்தரிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

		அமைப்புக்கள் தொடர்பாக எவ்வித பரீட்சிப்பையும் நடாத்தி இருக்கவில்லை.		
(iii)	1981 ஒக்டோபர் 16 திகதிய 107 ஆம் இலக்க சுற்றறிக்கை	4 கமநல சேவை செயற்குழுக்களில் ஆண்டு இறுதியில் அனைத்து கடன்கொடுனர்களின் மீதி உறுதிப்படுத்தல் பெற்றிருக்கவில்லை.	பதில் வழங்கப்படவில் லை.	சுற்றறிக்கை பிரகாரம் கடன் மீதி உறுதிப்பாட்டை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கக வேண்டும்.
(iv)	1987 பெப்ரவரி 18 திகதிய் 55 ஆம் இலக்க சுற்றறிக்கை	6 கமநல சேவை செயற்குழுக்களில் பல ஆண்டுகளாக நிலவிவரும் அறவிட வேண்டிய கடன் மீதிகளை அறவிட அல்லது அறவிட கமுடியாதெனில் முறையாக பதிவழிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	பதில் வழங்கப்படவில் லை.	கடன் மீதிகளை கால ரீதியாக அறவிடாத உத்தியோகத்தர்க ளிற்கு நடவடிக்கை எடுக்கவும், சுற்றறிக்கை பிரகாரம் அறிவிட வேண்டிய கடன் மீதிகளை அறவிடவும் நடவடிக்கை எடுக்கக வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 2024 ஆண்டில் 25 கமநல சேவை செயற் குழுக்களில் கூட்டுத் தொகை ரூபா 15,025,628 ஆன மிகை மற்றும் ஒரு செயற் குழுவில் ரூபா 203,820 ஆன பற்றாக்குறையும் ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை மற்றும் பற்றாக்குறை முறையே ரூபா 13,541,062 தொகை மற்றும் ரூபா 2,826,714 தொகை ஆனது. மீளாய்வாண்டு நிதி விளைவுகளின் பிரகாரம் 26 கமநல வங்கிகளின் கூட்டுத் தொகை ரூபா 7,273,273 ஆன மிகையானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 7,100,272 ஆனது.

2.2 நிதி விளைவு பகுப்பாய்வு

(அ) 11 செயற்குழுக்களின் மீளர்யவாண்டு செயற்பாட்டு விளைவுகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 7,475,268 ஆன் மிகை ஆனதுடன், அதற்கு நேரொத்த அந்த 11 செயற்குழுக்களின் முன்னைய ஆண்டின் மிகையின் கூட்டுப் பெறுமதி ரூபா 4,954,011 ஆனது. அதன் பிரகாரம் அந்த செயற்குழுக்கள் 11 இன் நிதி விளைவுகளில் ரூபா 2,521,260 ஆன் வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு விற்பளை வருமானம், ஏக்கர் வரி வருமானம் மற்றும் அறை வாடகை வருமானம் அதிகரித்தமை காரணமாகவுள்ளது.

(ஆ) 05 செயற்குழுக்களின் மீளர்யவாண்டு செயற்பாட்டு விளைவுகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 4,402,925 ஆன் மிகை ஆனதுடன், அதற்கு நேரொத்த அந்த 05 செயற்குழுக்களின் முன்னைய ஆண்டின் பற்றாக்குறையின் கூட்டுப் பெறுமதி ரூபா 2,826,714 ஆனது. அதன் பிரகாரம் அந்த செயற்குழுக்கள் 05 இன் நிதி விளைவுகளில் ரூபா 7,229,639 ஆன்

வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு சேவை வழங்கல், அறை வாடகை மற்றும் ஏக்கர் வரி வருமானம் அதிகரித்தமை மற்றும் முன்னைய ஆண்டில் நிலவிய மூலதன செலவுகள் மீளாய்வாண்டில் இல்லாதகை காரணமாக இருந்தது.

(இ) 09 செயற்குழுக்களின் மீளர்யவாண்டு செயற்பாட்டு விளைவுகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 3,147,435 ஆன் மிகை ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகையின் கூட்டுப் பெறுமதி ரூபா 6,453,565 ஆனதில் நிதி விளைவுகளில் ரூபா 3,306,130 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு செயற்குழுவொன்றின் பராமரிப்பு செலவு அதிகரித்தமை, சேவை வழங்கல் வருமானம் குறைந்தமை மற்றும் செலவினம் அதிகரித்தமை காரணமாக இருந்தது.

(ஈ) 01 செயற்குழுவின் மீளாய்வாண்டு செயற்பாட்டு விளைவுகள் ரூபா 203,820 ஆன பற்றாக்குறை ஆன போதும், அதற்கு எதிராக கடந்த ஆண்டின் மிகை ரூபா 2,083,453 ஆனதில் நிதி விளைவுகளில் ரூபா 2,287,273 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இநத வீழ்ச்சிக்கு பசளை விற்பளை வருமானம் மற்றும் நிலையான வைப்பு வட்டி வருமானம் குறைவடைந்தமை காரணமாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ பலவீனங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் பரிந்துரை	பரிந்துரை
(அ)	26 செயற்குழுக்களிற்குரிய மொத்த வயல் காணி 45,087 ஏக்கர்களில் நெல் பயிரிடமுடியுமான வயல் காணியின் அளவு 33,807 ஏக்கர்கள் ஆகும். 2024/25 பெறும் போகத்தில் நெல் பயிரிட்ட காணியின் அளவு 24,540 ஏக்கர்கள் ஆகும். அதன் பிரகாரம் பெறும் போகத்தில் பயிரிடப்படாத வயல்களின் அளவு 9,267 ஏக்கர்களாக இருந்தது.	எற்றுக் கொள்கிறேன். எதிர்காலத்தில் கைவிடப்பட்ட வயல் அளவினை குறைத்துக் கொள்ள முயற்சி எடுப்பதொக அறிவிக்கிறேன்.	கைவிடப்பட்ட வயல்களை பயிச் செய்வது தொடர்பில் முறையான வேலைத் திட்டமொன்றை இட வேண்டும்.
(ஆ)	12 கமநல சேவை செயற்குழுக்களிற்குரிய 381 கமநல அமைப்புக்களில் 29 கமநல அமைப்புக்கள் செயலிழந்து காணப்படுவதுடன் 14 கமநல சேவை செயற்குழுக்களிற்குரிய பதிவு செய்யப்பட்ட 679 பெண்கள் கமநல அமைப்புக்களில் 188 அமைப்புக்கள் செயலிழந்து காணப்பட்டன.	எற்றுக் கொள்கிறேன்.	முறையான வேலைத் திட்டமொன்றை இட்டு செயழிலந்துள்ள கமநல அமைப்புக்களை செயற்படுத்த தேவைான முயற்சிகளை எடுக்க வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டு இறுதியில் 5 கமநல சேவை செயற்குழுக்கள் அமைந்துள்ள சுமார் 3 ஏக்கர் 2 ரூட் 83 பர்சஸ் நிலத்தை குறித்த நிறுவனத்திடமிருந்து செயற்குழுவிற்கு சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	ஏற்றுக் கொள்கிறேன். சுவீகரிக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.	காணி சுவீகரிக்கும் நடவடிக்கையை துரிதப்படுத்த வேண்டும்.

(ஈ)	ஏக்கர் வரி அடியிதழ் பத்திர புதிய புத்தகமொன்றை வழங்கும் போது பழைய புத்தகத்தை பொறுப்பேற்று புதிய புத்தகத்தை வழங்க வேண்டிய போதும் 3 கமநல சேவை செயற்குழுக்களினால் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	ஒப்படைக்காத புத்தகங்களை பொறுப் பேற்கவும் எதிர்காலத்தில் பழைய புத்தகங்களை பொறுப் பேற்று புதிய புத்தகங்களை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.	பழைய அடியிதழ் புத்தகங்களை பொறுப்பேற்ற பின்னர் புதிய அடியிதழ் புத்தகங்களை வழங்க வேண்டியதுடன், அவ்வாறு செய்யாத உத்தியோகத்தர்களிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(உ)	12 கமநல சேவை செயற்குழுக்களின் 13 வங்கி நடைமுறை கணக்குகளிற்கு உரியதான மாதாந்த மீதி ரூபா 500,000 முதல் ரூபா 820,501 ஆன வீச்சளவில் காணப்பட்ட போதும் முறையான அங்கீகாரத்தை பெற்று குருங்கால முதலீடு செய்ய முயற்சி எடுத்திருக்கவில்லை.	ஏற்றுக் கொள்கிறேன். எதிர்காலத்தில் குருகிய கால முதலீடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.	நடைமுறை கணக்கில் மேலதிகமாக காணப்படும் தொகையை முறையான அங்கீகாரத்துடன் குருங்கால முதலீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஊ)	4 கமநல சேவை செயற்குழுக்களின் பாதுகாப்பு வேலிகள் மற்றும் துழைவு வாயில் உடைந்துள்ளதுடன் அவற்றை திருத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்காததால் செயற்குழுக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டு இருகாததுடன் வீட்டுத் தோட்ட வருமானமும் இழக்கப்பட்டிருந்தது.	பதில் வழங்கப்படவில்லை.	தேவையான திருத்தங்களை மேற்கொண்டு செயற்குழுவின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.
(எ)	பமுனுகம கமநல சேவை செயற்குழுவில் விற்பனை கூடம் பயன்படுத்தப்படாது விளைவற்று காணப்பட்டது.	திருத்தி வெளி விற்பனை கூடமாக நடாத்திச் செல்ல எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.	முறையான வேலைத் திட்டமொன்றை இட்டு செயற்குழுவின் வளங்களை விளைவற்று வைக்காது பயன்படுத்த வேண்டும்.
(ஏ)	2024 ஆண்டினுள் ‘‘நிலைபேறான வீட்டுத் தோட்டம்’’ வீட்டுத் தோட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 6 கமநல சேவை செயற்குழுக்களில் 1210 வீட்டுத் தோட்டங்களில் பயிரிடப்பட்டுள்ள போதும் 2024 திசெம்பர் 31 திகதிக்கு 298 வீட்டுத் தோட்டங்கள் மாத்திரம் செயற்படும் நிலையில் காணப்பட்டதுடன் 921 வீட்டுத் தோட்டங்கள் செயலிழந்து காணப்பட்டன.	அதிக மழை காரணமாக பயிர்கள் சேதமடைந்துள்ளன.	உத்தியோகத்தர்களின் மேற்பார்வை மற்றும் பின்தொடர் செயற்பாடுகளை துரிதப்படுத்தி வீட்டுத் தோட்ட பயிர்ச் செய்கையை தொடர்ந்து மேற்கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஐ)	மாபொதல கமநல சேவை செயற்குழுவில் 2008 மற்றும் 2009 ஆண்டுகளிற்கு உரியதாக விற்பனை செய்து பணம் செலுத்தும் அடிப்படையில் வழங்கிய பொருட்களிற்காக இரண்டு விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 57,360 தொகையை அந்த உத்தியோகத்தர்களின் மரணம் காரணமாக அறவிட முடியாத நிலையில் காணப்பட்டது.	மீதியை தீர்த்துக் கொள்ள கம்பஹ மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரிற்கு அனுப்பப்பட்டுள்ளது.	முறையாக நடவடிக்கை எடுத்து அறவிட வேண்டிய கடன் மீதிகளை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஒ)	பியகம கமநல சேவை செயற்குழுவில் விற்பனை செய்து பணம் செலுத்தும் அடிப்படையில் வழங்கிய விற்பனை பொருட்களிற்காக பெற வேண்டிய ரூபா 23,456 ஆன வட்டித் தொகை 2019 ஆண்டு முதல் நிலவிவருவதுடன் அத் தொகையை அதற்கு பொறுப்பான இரண்டு விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	ஏற்றுக் கொள்கிறேன்.	பணத்தை மீள் அறவிட பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஓ)	பஸ்யால கமநல சேவை செயற்குழுவில் 1989 முதல் சுழற்சி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 70,000 தொகையை செலுத்த அல்லது தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகத்திடம் அறிவுரை கோரப்பட்டுள்ளது.	செலுத்த வேண்டிய மீதிகளை செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஔ)	பஸ்யால கமநல சேவை நிலைய கட்டிடத்திறு வெளியில் காணப்பட்ட விற்பனை கூடத்தை பெண்கள் கமநல அமைப்பொன்றிற்கு மாதம் ரூபா 2,000 ஆன் வாடகை அடிப்படையின் மீது வழங்கியிருந்ததுடன் அதற்காக செல்லுபடியாகும் வாடகை உடன்படிக்கை ஒன்று இருக்கவில்லை.	செல்லுபடியாகும் வாடகை உடன்படிக்கை ஒன்றை தயாரிக்க நடவடிக்கை எடுக்கிறேன்.	சொத்துக்களை முறையாக எழுத்து மூல உடன்படிக்கையின் மீது வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், விரைவில் சங்கத்துடன் உடன்படிக்கையில் ஈடுபட வேண்டும்.
(க)	வல்பிட கமநல சேவை செயற்குழுவில் ஆண்டு 03 இற்கும் 06 இற்கும் இடையிலான காலப் பகுதியிலிருந்து நிலவிவரும் ரூபா 309,879 பெறுமதியான கிடைக்க வேண்டிய மீதியை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	அறவிட நடவடிக்கை எடுக்கிறேன்.	பெறவேண்டிய மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(கா)	கலஹிட்டியாவ கமநல சேவை செயற்குழுவில் கடந்த ஆண்டில் கணக்கு கூற்றுக்களில் குறிப்பிட்டிருந்த ரூபா 132,458 ஆன பதிவழிக்க பரிந்துரைத்திருந்த இருப்பை மீளாய்வாண்டு இறுதிவரை பதிவழித்திருக்கவில்லை.	பதில் வழங்கப்படவில்லை.	பரிந்துரைத்த இருப்பை முறையாக புத்தகங்களில் இருந்து பதிவழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(கி)	பியகம கமநல சேவை செயற்குழுவில் 2019 மற்றும் 2020 ஆண்டுகளில் இடம்பெற்ற இருப்பு பற்றாக்குறை தொடர்பாக ரூபா 477,915 ஆன தொகையை முன்னால் இருப்பிற்கு பொறுப்பான உத்தியோகத்தரிடமிருந்து 2020 ஜுன் 26 திகதிக்கு முன்னர் அறவிட வேண்டிய போதும், 05 ஆண்டு காலம் கடந்துள்ள போதும் அத் தொகையை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	பதில் வழங்கப்படவில்லை.	பரிந்துரைத்த தொகையை அறிவிட நடவடிக்கை எடுக்காத தரப்பினரிற்கு நடவடிக்கை எடுத்தலும், முறையாக நடவடிக்கை எடுத்து குறித்த தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(கீ)	பியகம கமநல சேவை செயற்குழுவில் 2024 திசெம்பர் 31 திகதிக்கு அறவிட வேண்டிய ரூபா 384,614 ஆன பெற வேண்டிய மீதிகளில் ரூபா 103,108 தொகை 10 ஆண்டுகளை விஞ்சிய கடன் மீதிகளாவதுடன் ரூபா 281,506 ஆன 02 கடன் மீதிகள் ஆணடு 05-10 இற்கு இடையிலான போது இந்த கடன் மீதிகளை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	பதில் வழங்கப்படவில்லை.	கால ரீதியாக கடன் மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்காத தரப்பினரிற்கு நடவடிக்கை எடுக்கவும், அந்த கடன் மீதிகளை விரைவில் அறவிடவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(கு)	கமநல சேவை செயற்குழுக்களில் பொருந்தியுள்ள விரல் அடையாள இயந்திரங்கள் அடிக்கடி செயலிழக்கும் நிலைக்கு ஆகியிருந்ததுடன் 07 செயற்குழுக்களிற்கு உரியதாக இயந்திரத்தில் விரல் அடையாளம் இடப்பட்ட போதும் அதில் காணப்படும் மென்பொருள் தவறின் காரணமாக அறிக்கையை பெற்றுக் கொள்ள முடியாத நிலை காணப்படுவதன் மீது விரல் அடையாள இயந்திரம் பொருத்தும் நோக்கம் அடையப்பெற்றிருக்கவில்லை.	ஏற்றுக் கொள்கிறேன். விரல் அடையாள இயந்திரத்தில் காணப்படும் குறைகள் தொடர்பாக குறித்த கம்பனி மற்றும் மாவட்ட அலுவலகம் அறிவுருத்தப்பட்டுள்ளது.	முறையான மேற்பார்வையின் கீழ் விரல் அடையாள இயந்திரத்தின் செயற்பாட்டை பேணிக் கொள்ள தேவையான கடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.2 நிதிய குறைபயன்பாடு

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் பரிந்துரை	பரிந்துரை
(அ)	02 செயற்குழுக்களிற்கு உரியதாக 2021 ஆண்டில் சேதனப் பசளை உற்பத்தி செயற்திட்டக்காக கமநல சேவைகள் திணைக்களம் வழங்கியிருந்த கூட்டுத் தொகை ரூபா 200,000 ஆன நிதிஏற்பாட்டிலிருந்து ரூபா 138,675 ஆன தொகை குறித்த செயற்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை.	ஏற்றுக் கொள்கிறேன். அறிவுரை கிடைத்த பின்னர் பணத்தை மீள் அனுப்ப நடவடிக்கை எடுக்கிறேன்.	குறித்த சேதனப் பசளை உற்பத்தி நடவடிக்கைகளிற்காக பயன்படுத்த அல்லது கமநல அபிவிருத்தி ஆணையாளரிற்கு தீர்க்க நடடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	மானிய பசளை நிகழ்ச்சித் திட்டத்துடன் தொடர்பாக பல்லேவெல கமநல சேவை செயற்குழுவினால் ஆரம்பித்திருந்த வங்கி நடைமுறை கணக்கு 2021 ஆண்டிலிருந்து கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளாது செயலிழந்த நிலையில் காணப்பட்டதுடன் 2024 திசெம்பர் 31 திகதியன்று அக் கணக்கின் மீதி ரூபா 97,525 ஆனது.	மானிய பசளை செயற்படாததால் குழுவின் கணக்கிற்கு மாற்ற நடவடிக்கை எடுக்கிறேன்.	இத் தொகையை ஆக்கபூர்வமாக முகாமைத்துவம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் பரிந்துரை	பரிந்துரை
(அ)	7 கமநல சேவை செயற்குழுக்களிற்கு உரியதாக கமநல வங்கிக்காக 2023 மற்றும் 2024 ஆண்டுகளில் கொள்வனவு செய்திருந்த ரூபா 1,604,960 பெறுமதியான இஸ்கேனர், அச்சுப் பொறிகள் உள்ளடங்களாக கணனி மற்றும் உதிரிப்பாகங்கள் மீளாய்வாண்டிலும் பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை.	கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் பென்பொருள் மற்றும் முறைமை இதுவரை வழங்கப்படவில்லையென அறிவிக்கிறேன்.	குறித்த பென்பொருள் மற்றும் முறைமையை விரைவில் பெற்றுக் கொண்டு இந்த கணனி மற்றும் உதிரிப்பாகங்களை ஆக்கபூர்வமாக ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	2003 ஆண்டில் மீறிகம பிரதேச செயலகத்தினால் தற்காலிகமாக பஸ்யால கமநல சேவை செயற்குழுவிற்கு வழங்கியிருந்த நான்கு சக்கர டெக்டரை 2025 மே மாதம் வரை செயற்படுத்த முடியாது டெக்டர், டேலர் மற்றும் கலப்பை என்பன நிலையத்தின் பின்பக்கமாக கூடமொன்றில் துருப்பிடித்த வன்னம் காணப்பட்டதுடன் அதனை திருத்தி மீண்டும் பயன்படுத்த இயலுமான நிலைக்கு ஆக்கிக் கொள்ள செயற்குழுவினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	மீள் திருத்தத்திற்காக பாரிய தொகையை செலவிட நேர்வதுடன் அதற்காக செயற்குழுவிடம் நிதி இல்லையென அறிவிக்கிறேன்.	டெக்டரை திருத்தம் செய்து குழுவின் பயன்பாட்டிற்கு எடுக்க அல்லது திருத்தம் செய்து பயன்படுத்த இயலுமான ஏனைய குழுவொன்றிற்கு ஒப்படைக்க அல்லது முறையான அங்கீகாரத்தின் கீழ் பராதீனம் செய்யவேனும்

			நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	பல்லேவெல கமநல சேவை செயற்குழுவின் இன்வென்றி பதிவேட்டில் குறிப்பிட்டுள்ள பிரதியெடுக்கும் இயந்திரமொன்று, 03 புல் வெட்டும் இயந்திரங்கள் மற்றும் 01 வீட் பரோ பயன்படுத்தப்படாமல் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதுடன் திருத்தம் செய்ய அல்லு பராதீனம் செய்ய செயற்குழு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	சொத்துக்களை திருத்தம் செய்து பயன்பாட்டிற்கு எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.	விரைவில் செயற்பட்டு திருத்தம் செய்து சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	மீறிகம கமநல சேவை செயற்குழுவிற்கு சொந்தமான 4 சக்கர டெக்டர் பல ஆண்டுகளாக செயற்படு நிலையில் இல்லாததுடன் எவ்வித செயற்பாட்டிற்கும் எடுக்கப்படாது அலுவலக வளவில் திருத்தி வைக்கப்பட்டுள்ளது.	கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரின் அறிவுரை மீது முன் நடவடிக்கை எடுக்கிறேன்.	விரைவில் செயற்பட்டு திருத்தம் செய்து சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.4 செயற்திட்ட தாமதங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் பரிந்துரை	பரிந்துரை
(அ)	03 கமநல சேவை செயற்குழுக்களிற்கு உரியதாக முன்னுரிமையை இனங்கண்டிருந்த ரூபா 1,966,111 தொகையான 04 செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி இருக்கவில்லை.	மழை காரணமாக செயற்படுத்த முடியவில்லை.	குறித்த செயற்திட்டத்தை விரைவில் செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.5 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் பரிந்துரை	பரிந்துரை
(அ)	26 செயற்குழுக்களிற்கு உரியதாக காணப்பட்ட 741 விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி வலையங்களிற்காக இணைக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 475 ஆனதில் 266 வலையங்களில் பதில் கடமை நிலைமை ஏற்பட்டிருந்தது.	வெற்றிடமான பிரிவுகளிற்கு புதிய உத்தியோகத்தர்களை ஆட்சேர்க்கும் காரணத்தால் அந்த பிரிவுகளிற்கு பதிற் கடமை உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.	முறையான வேலைத் திட்டத்தின் கீழ் பிரிவுகளின் விவசாயிகளிற்கு சேவையை வினைத்திறனாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள்

(அ)	கலஹிடியாவ கமநல சேவை செயற்குழுவில் 2024 திசெம்பர் 31 திகதியன்று நிதி நிலைமை கூற்றில் காட்டப்படும் ஆண்டு 04 முதல் 14 வரையான காலப் பகுதிக்குரிய ரூபா 291,164 ஆன செலுத்த வேண்டிய 08 கணக்கு மீதிகளை தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	பதில் வழங்கப்படவில்லை.	செலுத்த வேண்டிய மீதிகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	கலஹிடியாவ கமநல சேவை செயற்குழுவில பல ஆண்டுகளாக நிலவிவரும் ரூபா 183,461 ஆன 12 பெற வேண்டிய மீதிகள் மற்றும் முன்னால் விற்பனை எழுதுனர் ஒருவரிடமிருந்து 4 ஆண்டுகளிற்கு அதிக காலமாக அறிவிட முடியாதிருந்த ரூபா 21,675 தொகை மற்றும் முன்னால் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து 15 ஆண்டுகளிற்கு அதிக காலமாக அறவிட முடியாதிருந்த ரூபா 528,722 தொகையை மீளாய்வாண்டு இறுதி வரை அறவிட்டிருக்கவில்லை.	பதில் வழங்கப்படவில்லை.	கடன் மீதியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், அவற்றை கால ரீதியாக அறவிட நடவடிக்கை எடுக்காத தரப்பினரிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் பரிந்துரை	பரிந்துரை
(அ)	2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் III பிரிவின் 16(2) பிரிவு மற்றும் 2021 நவம்பர் 16 திகதிய இலக்கம் பீ.ஈ.டீ. 01/2021 கொண்ட சுற்றறிக்கையுடனான ''செயற்பாட்டு கைநூலின்'' 6.6 பந்தி பிரகாரம் நிதிக்கூற்றுக்களை கணக்காய்விற்காக கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களிற்குள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதும் கலஹிடியாவ கமநல சேவை செயற்குழுவின் 2024 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2025 ஜுன் 03 திகதி கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.	பதில் வழங்கப்படவில்லை.	2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் சுற்றறிக்கை பிரகாரம் உரிய திகதிக்கு நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்க வேண்டும்.

5. கமநல வங்கிகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் பரிந்துரை	பரிந்துரை
(அ)	23 கமநல சேவை செயற்குழுக்களிற்குரிய 23 கமநல வங்கிகளிற்குரியதாக காலாவதியான கடனை அறவிடுவதற்காக நியாய சபைக்கு அனுப்புதல், நீதிமன்ற நடவடிக்கை எடுத்தல் மேற்கொண்டுள்ள போதும் 2024 திசெம்பர் 31 திகதியன்று வங்கியினால் வழங்கிய கடன்களில் 1077 கடனாளர்களிற்குரிய காலம் கடந்த கூட்டுத் தொகை ரூபா 27,592,687 ஆன கடன் தொகையை அறவிட்டிருக்கவில்லை.	நிலுவை கடனை அறவிடுவதற்காக நியாய சபைக்கு அனுப்புதல், நீதிமன்ற நடவடிக்கை எடுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.	நிலுவை கடன் மீதிகளிற்குரிய கடன் வழங்கல் மற்றும் காலரீதியாக அறவிடாதது தொடர்பாக முறையான விசாரணை ஒன்றை நடாத்தவும், நிலுவை கடன் மீதிகளை விரைவில் அறவிடளையும் மேற்கொள்ள வேண்டும்.
(ஆ)	கமநல அபிவிருத்தி ஆணையாளரின் 2022 ஏப்ரல் 27 திகதிய இலக்கம் 7/12/5/4 கொண்ட சுற்றறிக்கை கடிதத்தின் 04 பந்தி பிரகாரம் அமைப்புக்களில் காணப்படும் நிதியத்தின் ஒரு பகுதியை கமநல வங்கியில் வைப்புச் செய்ய வேண்டிய போதும் 14 செயற்குழுக்களிற்குரிய 549 மொத்த கமநல அமைக்குக்களில் 372 மாத்திரம் கமநல வங்கிகளில் வைப்புக்களை பேணிச் சென்றிருந்தன.	கமநல அமைப்புக்களிற்கு நிதியத்தை வைப்புச் செய்யுமாறு அறிவுருத்தப்பட்டுள்ளது.	முறையான மேற்பார்வை வழிகாட்டல் செய்து சுற்றறிக்கை பிரகாரம் வைப்புக்களை பேணிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	2024 திசெம்பர் 31 திகதியன்று 12 கமநல வங்கிகளிற்குரிய 29216 பைப்புக் கணக்குகளில் 15429 கணக்குகள் செயலிழந்து காணப்பட்டன.	கணக்கு உரிமையாளர்களை அறிவுருத்தி கணக்குகளை செயற்படுத்துமாறு அறிவுருத்தப்பட்டுள்ளது.	முறையான மேற்பார்வையின் வழிகாட்டலின் கீழ் செயலிழந்த கணக்குகளை செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.